**CC**.**No**.217/2024

**Date**: 12.03.2026

**ம.சா. 2. அந்தோணி ஜெகன் த/பெ. ஆரோக்கிய சாமி, நாகவயல்.**
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**குறுக்கு விசாரணை**

**1) நான் M.PEd., முதலாம் ஆண்டு படித்து வருகிறேன். வழக்கு கடனுறுதிசீட்டில் என்ன விபரம் எழுதப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கடனுறுதிசீட்டில் எத்தனை நபர்கள் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர் என்றால் 2 நபர்கள் சாட்சி கையொப்பம் செய்துள்ளோம். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள காசோலையில் நிரப்பப்பட்டுள்ள எழுத்துக்கள் என்னுடையது என்றால் சரியல்ல. ம.சா.ஆ, 7 ஆவணத்தில் எழுதியதும் சாட்சியுமான என்ற இடத்தில் A.அந்தோணி ஜெகன் என்பது நான் எழுதியதுதான். அதன் அருகில் உள்ள விபரங்களும் நான் எழுதியதுதான். ம.சா.ஆ.7 ஆவணத்தில் எழுதியதும் சாட்சியுமான என்ற விபரமும், ம.சா.ஆ.1 ஆவணத்தில் பெயர் மற்றும் தொகை எழுத்தால் மற்றும் எண்ணால் எழுதப்பட்டது என்னால்தான் என்றால் சரியல்ல. மேற்படி 2 கையெழுத்துக்களும் என்னால் எழுதப்படவில்லை என்பதை கையெழுத்து நிபுனருக்கு அனுப்பி பரிசோதிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். மேற்படி ஆவணங்களை எதிரி தரப்பில் கையெழுத்து நிபுனருக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் மேற்படி ஆவணத்தை எங்கு வைத்து எழுதினேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியிருக்கிறேன். பழனியப்பன் வீட்டில் வைத்து எழுதினேன்.**

**2) நான் முதல் விசாரணையில் மேற்படி ஆவணத்தை பழனியப்பன் வீட்டில் வைத்து எழுதினேன் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. எனது**

சொந்த ஊர் நாகவயல். எதிரியை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 5-6 வருடங்களாக தெரியும். எப்படி தெரியும் என்றால் எங்கள் ஊரில் பெண் எடுத்துள்ளார், முக்கிய நிகழ்வுகளுக்கு ஊருக்கு வந்து செல்வார். எதிரிக்கு எத்தனை குழந்தை, அவரது மனைவி பெயர் என்ன, மாமனார் பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது. அவரது மாமியார் பெயர் மட்டும் தெரியும். என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்த நபர்கள் யார் என்றால் யாரும் வரவில்லை. ஆரோக்கியசாமியும் நானும் வந்தோம். நாகவயலுக்கும், பாடத்தான்பட்டிக்கும் சுமார் 500 மீட்டர் என்றால் சரிதான். பாடத்தான்பட்டியை சேர்ந்த அருளாந்து மகன் அந்தோணிசாமி எனக்கு உறவினரா என்றால் எனக்கு உறவினர் இல்லை. எனக்கு தெரிந்தவர். மேற்படி அந்தோணிசாமி பாடத்தான்பட்டியில் வசிப்பதாலும் அந்த ஊரில் பெரியமனிதர் என்பதாலும் எனக்கு தெரியும்.

3) அந்தோணிசாமி கேட்டுக்கொண்டதன்பேரில் நான் எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் பழனியப்பனுக்கும் எந்த கடன் கொடுக்கல் வாங்கலும் கிடையாது என்றால் சரியல்ல. புகார்தாரர் பழனியப்பனின் அப்பா பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது. புகார்தாரர் பழனியப்பனுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 குழந்தைகள் அவரது மனைவி பெயர் தெரியாது. அவர் எங்கள் குடும்ப நண்பர் என்றால் அப்பாவும் அவரும் நண்பர்கள். பழனியப்பனின் அப்பா பெயர் தெரியாது. பழனியப்பன் யாரிடம் வேலை செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது அவர் சுயதொழில்தான் செய்கிறார். எனக்கு புகார்தாரர் பழனியப்பனையும் தெரியாது என்றாலும், எதிரியையும் தெரியாது என்றாலும், அந்தோனிசாமிக்கும் எதிரிக்கு ஏற்கனவே இருந்த கடன் கொடுக்கல் வாங்கலில் இருந்த வழக்கு காசோலை மற்றும் கடனுறிசீட்டை என்னை வைத்து நிரப்பி பழனியப்பன் மூலமாக தாவா வழக்கை அந்தோனி சாமி தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இன்று கல்லூரி

**விடுமுறையா என்றால்  கல்லூரி வேலை நாள்.  நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அனுமதி பெற்று வந்துள்ளேனா என்றால் சரிதான். நான் எனது துறை தலைவரிடம் நீதிமன்றத்திற்கு செல்வதற்கு அனுமதி கடிதம் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாரா என்றால் தயாராக இருக்கிறேன்.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.12 18:00:25 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)